**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 19.01.2026</u>**

**OS.122/2020**

**வா.சா.2 திரு.குலோத்துங்கன்**

**வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியும். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை ஏதாவது வந்ததா என்றால் இல்லை. துளசியம்மாள் எனக்கு உறவுமுறை என்று சொல்லியுள்ளேன் எந்த முறையில் அவர் எனக்கு உறவு என்றால் எனது தங்கள் இருவரை துளசியம்மாள் மகன்களுக்கு திருணம் செய்து கொடுத்துள்ளேன் அந்த வகையில் உறவு. இரண்டு தங்கைகளின் கணவர் பெயர் என்ன என்றால் முருகம்மாளின் கணவர் பெயர் செல்வம், மற்றொரு தங்கை பவுனம்மாள் கணவர் பெயர் மணி. வழக்கு தாக்கல் செய்துள்ள முருகம்மாள், பவுனம்மாள் ஆகிய இருவரும் எனது உடன்பிறந்த தங்கைகள் என்றால் சரிதான்.

2. செண்பகம், செல்வமணி, லாவண்யா, சிலம்பரசன் ஆகியோர் எனது சகோதரியின் பிள்ளைகள் என்றால் சரிதான். துளசியம்மாளின் கணவர் வெங்கோபு எந்ததேதியில் இறந்தார் என்றால் அது எனக்கு நினைவில்லை. துளசியம்மாள் இறந்ததற்கு 10 நாட்களுக்கு முன்பு சென்று பார்த்ததாக சொல்லியுள்ளேன் அவர் எந்த ஆண்டு இறந்தார் என்றால் அது எனக்கு நினைவில்லை. துளசியம்மாள் எங்கு குடியிருந்தார் என்றால் மோப்பிரிப்பட்டி

காட்டுக்கொட்டாயில் குடியிருந்தார். அவர் குடியிருந்தது 4ம் பிரதிவாதி குமரேசன் வீட்டிற்கு பக்கத்தில் என்றால் சரிதான். துளசியம்மாள் இறக்கும்வரை குமரேசன், பிரகாசம் பாதுகாப்பில் தான் இருந்தார் என்றால் சரிதான், ஆனால் தங்கைகளும் அவ்வப்போது சென்று பார்த்து வந்தார்கள்.

3. எனது தங்கைகள் குடியிருப்பது அரூர்– மொரப்பூர் நான்கு வழி சாலை அருகே என்றால் சரிதான். துளசியம்மாளுக்கு அடிபட்டு எலும்பு முறிவு ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் அது எந்த ஆண்டு என்றால் அது எனக்கு தெரியாது, துளசியம்மாள் எந்த மருத்துவமனையில் வைத்தியம் செய்து கொண்டார் என்றால் அதுவும் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து பற்றி துளசியம்மாளிடம் எந்த வருடம் நான் விசாரித்தேன் என்றால் வருடம் பற்றி எல்லாம் எனக்கு தெரியவில்லை, ஆனால் அவர் காலில் அடிபட்டு இருக்கும்போது விசாரித்தேன். இன்றிலிருந்து ஒரு 15 வருடத்திற்கு முன்பு துளசியம்மாளுக்கு அடிபட்டு இருக்குமா என்றால் இருக்கும்.

4. வழக்கு சொத்து எவ்வளவு என்றால் ஓன்றெகால் ஏக்கர். அதன் சர்வே எண், நான்கு பக்க எல்லைகள் என்ன என்றால் அது எல்லாம் எனக்கு தெரியாது. தாவா சொத்தை துளசியம்மாள் இறப்பதற்கு முன்பு குமரேசன், பிரகாரம், சுகுணா அவரை பராமரித்து வந்ததால் துளசியம்மாள் மேற்படி குமரேசன், பிரகாசம், சுகுணா ஆகியோருக்கு உயில்சாசனம் எழுதி வைத்து விட்டார் என்றால் இல்லை. 2017–ல் துளசியம்மாள் உயில்சாசனம் எழுதிய பிறகு குமரேசன், பிரகாசம், சுகுணா ஆகியோர்தான் சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. வாதிகள் எனக்கு உடன்பிறந்த சகோதரிகள் என்பதால்அவர்களுக்கு ஆதரவாகவும், பிரதிவாதிகளுக்கு எதிராகவும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.19 17:27:52 +0530